**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**OS.No.26/2021- PW-1**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.எம்.திருவேங்கடம் | District | வேலூர் |
| Father Name | திரு.மாசிலாமணி | Occupation | இந்திய துணை இராணுவ வேலை |
| Village /Area | கீழ்வேளம் | Age | 55 |
| Taluk | வேலூர் | Aadhar Card No. | 3124 9965 8981 |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **02.02.2026.**

**முதல் விசாரணை:**

நான் இந்த வழக்கில் 2-ம் வாதி ஆவேன். நான் இன்று தாக்கல் செய்யும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துகள் என்னுடைய கையெழுத்துகள் தான். அந்த நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் என்னால் என் வழக்கறிஞருக்கு சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டுள்ளது. அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். வாதி பெயருக்கு ஆறுமுகம் அவர்களால் ஆற்காடு சார்பதிவாளர் அலுவலகத்தின் ஆவண எண்.436/2013, தேதி 24.01.2013 விக்கிரைய அக்ரிமெண்ட் அசல் **வா.சா.ஆ.1** ஆகும். 22.12.2020 தேதியிட்ட சட்ட அறிவிப்பு **வா.சா.ஆ.2** ஆகும். 1-வது பிரதிவாதி சட்ட அறிவிப்பை வாங்க மறுத்ததற்கான அஞ்சலக உறை **வா.சா.ஆ.3** ஆகும். 2-வது பிரதிவாதி சட்ட அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை **வா.சா.ஆ.4** ஆகும். 1-வது வாதி செல்வி அவர்களின் கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட இறப்பு சான்றிதழ் **வா.சா.ஆ.5** ஆகும். 1-வது வாதி செல்வி அவர்களின் கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட வாரிசு சான்றிதழ் **வா.சா.ஆ.6** ஆகும். 2-வது வாதி திருவேங்கடம் அவர்களின் ஆதார் அடையாள அட்டை நகல் **வா.சா.ஆ.7** ஆகும். பிராதுப்படி தீர்ப்பாக வேண்டிக்கொள்கிறேன்.

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

BALAKRISHNAN Digitally signed by BALAKRISHNAN DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.